**PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. GLOBLE ENTERPRISES LOCATED AT S.F. NO:6/4A LEASE OVER AN EXTENT OF 1.44.5 HA LOCATED AT HANUMANTHAPURAM VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 17.08.2023 AT 11.00 AM AT M/S.SRI CHOWDESHWARI CONVENTION HALL, ANCHETTY MAIN ROAD, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT– 635107.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. C. Suresh | : | Special District Revenue Officer,<br>(LA – 948 A STRR),<br>National Highways, Hosur.<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District. |
| 3 | Er. V.Deenadayalan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District. |
| 4 | Thiru.D.Saathapa | : | The Proponent<br>M/s. Globle Enterprises |
| 5 | Thiru.Rajkumar | : | EIA Consultant,<br>M/s. GEO Exploration and Mining Solutions,<br>Salem |
| | Public | : | 60 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed project of black granite quarry of M/s. Globle Enterprises Lease over an Extent of 1.44.5 Ha Located at SF.No. 6/4A, Hanumanthapuram Village, Denkanikottai Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The Hindu" dated 13.07.2023 and bit notices regarding public hearing was issued to the public of Hanumanthapuram Village, Hosaahalli Village, Thippanur Village and Muthunarayana Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

Special District Revenue Officer, National Highways, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Special District Revenue Officer, National Highways, Hosur has requested the project proponent to explain about their proposed Black Granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Rajkumar, EIA Consultant, M/s. GEO Exploration and Mining Solutions, Salem of the proposed Black Granite quarry project has made presentation about the proposed Black Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental

Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Black Granite quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Tmt. Janaki, Hosahalli Village:**

Tmt. Janaki has said that, the management of M/s. Global Enterprises have given necessary facilities to our villages. They planted trees and toilet facilities were constructed to the school children. Further, she welcomed the proposed quarry project.

**2. Thiru. Govindan, Hanumanthapuram Village:**

Thiru. Govindan has asked that, if any dust emission affected to the public during the time of movement of heavy vehicles? and if any employment opportunities to the every household located in the Hanumanthapuram Panchayat. Further, he said, no objection to this proposed quarry.

**3. Thiru. Pachamuthu, Hanumanthapuram Village:**

Thiru. Pachamuthu has asked that, if any problem to the school children and road, because of coming this proposed quarry?

**Answer:**

The proponent of M/s. Global Enterprises has replied that, the road will be maintained by sprinkling of water and assured to give the facilities requested by the public.

**Thiru. Pachamuthu, Hanumanthapuram Village:**

He said that, water sprinkler shall be carried out on the road, when before the movement of heavy vehicles and movement of school children in evening time. He also said that, water sprinkler shall be carried at twice or thrice in a day. Further, he said that, no objection to the proposed quarry project.

4. **Thiru. Raja, Irudukottai Village:**

Thiru. Raja has said that, there is no problem due to this proposed quarry project and water sprinkler shall be carried out on the road before the movement of heavy vehicles from the quarry.

5. **Thiru. Rajesh, Thippanur Village:**

Thiru. Rajesh has said that, no objection to this proposed quarry operation and requested to give employment to the local people. All local people are going outstation for employment. So, he requested to create employment in this quarry to the local people. Further, he said that, there is no objection, if the quarry will be operated as per the government norms.

**Answer:**

The proponent of M/s. Global Enterprises has replied that, employment opportunities will be given to the local people.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 4 number of petitions were received on the proposed M/s. Globle Enterprises, Black Granite quarry project during the public hearing meeting. 'The petitions are enclosed herewith'.

Further, it is informed that, no written representation and E-mail petition was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Black Granite quarry project.

13

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| 22/8/2023<br>**District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur**<br>22/08/23 | **Special District Revenue Officer**<br>**(LA – 948 A STRR)**<br>**National Highways**<br>**Hosur**<br>4/7 | **District Collector**<br>**Krishnagiri**<br>4/7 |

3

**கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், அனுமந்தாபுரம் கிராமத்தில், சர்வே. எண். 6/4A, உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ், கருப்பு வண்ண கிரானைட் குவாரி 1.44.5 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 17.08.2023 அன்று அஞ்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தி/ள். ஸ்ரீ சௌடேஸ்வரி கன்வென்சன் ஹால் மண்டபத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. C. சுரேஷ் | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>(நில எடுப்பு – 948A STRR)<br>தேசிய நெடுஞ்சாலை, ஓசூர்.<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.V.தீனதயாளன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.D. சாதப்பா | : | உரிமையாளர்<br>தி/ள்.குளோபல் எண்டர்பிரைசஸ் |
| 5 | திரு.ராஜ்குமார் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்,<br>தி/ள். ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், |
| | பொதுமக்கள் | : | 60 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் கருப்பு வண்ண கிரானைட் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி இந்து" நாளிதழ்களில் 13.07.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், அனுமந்தபுரம், ஓசாஹள்ளி, திப்பனூர், முத்துநாராயண ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கருப்பு வண்ண கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) தேசிய நெடுஞ்சாலை, ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் கருப்பு வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் கருப்பு வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.ராஜ்குமார் தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கருப்பு வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திருமதி. ஜானகி, ஒசஹள்ளி கிராமம் :**

திருமதி. ஜானகி அவர்கள், தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தினர் எங்கள் கிராமங்களுக்கு போதுமான வசதி வாய்ப்பு செய்து கொடுத்துள்ளார்கள். பள்ளிகளில் மரங்கள் வைத்தும் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு கழிவறைகள் கட்டி கொடுத்தார்கள். மேலும், இத்திட்டத்தினை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**2. திரு.கோவிந்தன், அனுமந்தபுரம் கிராமம்::**

திரு. கோவிந்தன் அவர்கள், இந்நிறுவனத்தின் குவாரியில் கனரக வாகனங்கள் இயக்கப்படுவதால் அதிகமான புகை வரும், அப்பொழுது பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு எற்படுமா? மற்றும் அனுமந்தபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் வேலைவாய்ப்பு கிடைக்குமா? என்று வினவினார். மேலும், இக்குவாரி வருவதினால் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**3. திரு. பச்சமுத்து, அனுமந்தபுரம் கிராமம்:**

திரு. பச்சமுத்து அவர்கள், தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவனம் வருவதினால் பள்ளி குழந்தைகள் மற்றும் சாலைகளுக்கு எதாவது பாதிப்பு ஏற்படுமா? என்று வினவினார்.

**பதில் :**

தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவன உரிமையாளர் அவர்கள், சாலையானது தண்ணீர் தெளித்து பராமரிக்கப்படும் மற்றும் பொதுமக்கள் கேட்கும் வசதிகளை செய்து தருவோம் என்று பதிலளித்தார்.

7

திரு. பச்சமுத்து, அனுமந்தபுரம் கிராமம்

கனரக வாகனங்களில் கற்களை ஏற்றி செல்லும் பொழுதும் மற்றும் மாலையில் பள்ளி குழந்தைகள் செல்லுவதற்கு முன்பும் சாலையில் தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும். மேலும், தினமும் இரண்டு மற்றும் மூன்று முறை சாலையில் தண்ணீர் தெளிக்கப்பட வேண்டும் என்று கூறினார். மேலும், இக்குவாரி வருவதினால் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**4. திரு. ராஜா, இருதுகோட்டை கிராமம்:**

திரு. ராஜா அவர்கள், இக்குவாரி வருவதினால் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும் கனரக வாகனங்கள் செல்வதற்கு முன் சாலையில் தண்ணீர் தெளிக்கப்பட்டு, பின் இயக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

**5. திரு. ராமேஷ், திப்பனூர் கிராமம்:**

திருமதி. ராமேஷ் அவர்கள், இக்குவாரி செயல்படுவதால் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை எனறும், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். உள்ளூர் மக்கள் எல்லாரும் வெளியூரில் சென்று வேலைப்பார்க்கின்றனர். அதனால் இக்குவாரியில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டார். அரசாங்கம் வகுத்துள்ள விதிமுறைகளின் படி குவாரி நடத்தினால் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**பதில் :**

தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் திட்ட உரிமையாளர் அவர்கள், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதாக கூறினார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் கருப்பு வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 4 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். குளோபல் எண்டர்பிரைசஸ் கருப்பு வண்ண கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்பு வண்ண கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

22/8/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

22/8/23

தனி மாவட்ட வருவாய் அலுவலர்
(நில எடுப்பு – 948A STRR)
தேசிய நெடுஞ்சாலை, ஓசூர்

5/7

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி

5/7